# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

***********

**முறையீட்டு மனு எண்.042/2019/பே.1**

**நாள்: 19-03-2019.**

**திரு.ஆர்.பழனிச்சாமி,**
**எண்.108, கிழக்குத் தெரு,**
**அரவக்குறிச்சி,**
**கரூர் மாவட்டம்.** **-- முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**அரவக்குறிச்சி பேரூராட்சி**
**கரூர் மாவட்டம்.** **-- எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பேரூராட்சி, எண்.108, கிழக்குத் தெருவில் வசிக்கும் திரு.ஆர்.பழனிச்சாமி, த/பெ திரு.ராஜகோபால், முறையீட்டு மனுதாரரது நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.01.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 042/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தான் அரவக்குறிச்சி பேரூராட்சி, எஸ்.ஆர்.ஒ. தெருவில் வசிப்பதாகவும், தனது வீட்டின் முன்புறமுள்ள பேரூராட்சியால் அமைக்கப்பட்ட சின்டெக்ஸ் டேங்கினை அகற்றுவது தொடர்பான தனது கோரிக்கை குறித்து முறைமன்ற நடுவ ஆணை எண்.42/2018/நாள் 01.10.2018ல் ஆணையிடப்பட்டதாகவும், தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு அரவக்குறிச்சி பேரூராட்சியில் எஸ்.ஆர்.ஒ.தெருவிலுள்ள சின்டெக்ஸ் டேங்க் தனது வீட்டிற்கு இடையூறாக உள்ளதால் அதனை அகற்றக் கோரி மீண்டும் தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.01.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம், முறையீட்டு மனுவின் நகலினை, கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான விரிவான ஆய்வறிக்கையினை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் 20.02.2019 நாளிட்ட அறிக்கையில், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சின்டெக்ஸ் டேங்க் தொடர்பாக 09.02.2019 அன்று கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், மற்றும் அதனைத் தொடர்ந்து பல முறை நேரில் மேற்படி இடத்தினை பார்வையிட்டதாகவும், ஆய்வின்போது முறையீட்டு மனுதாரர், மனுவில் புகார் தெரிவித்துள்ளவாறு டேங்க் அருகில் எவரும் துணி துவைக்கவில்லை எனவும், உள்ளாடையுடன் எவரும் குளிக்கவில்லை என்ற விவரமும் தெரியவந்ததாகவும், இது குறித்து சில நபர்களிடம் விசாரணை மேற்கொண்டதில் அவ்வகையான நிகழ்வுகள் ஏதும் நடப்பதில்லை என பொதுமக்கள் தகவல் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எஸ்.ஆர்.ஓ. தெருவில் அமைந்துள்ள சின்டெக்ஸ் டேங்க் மூலம் மேற்படி தெருவில் அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அலுவலக நிமித்தமாக வரும் பொதுமக்கள் டேங்க் நீரை பயன்படுத்தி வருவதாகவும், நாள் ஒன்றிற்கு குறைந்தபட்சம் 100 நபர்கள் சின்டெக்ஸ் தொட்டி நீரை பயன்படுத்துவதாகவும், முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளது போல் மூன்று வீட்டுக்காரர்கள் மட்டும் பயன்படுத்துகிறார்கள் என்ற புகாரில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சின்டெக்ஸ் தொட்டியானது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் அமைக்கப்பட்டது எனவும் தொட்டியினை மாற்றி அமைக்க தெருவில் போதிய இடவசதி இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சின்டெக்ஸ் தொட்டி 2011–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நிலையில், முறையீட்டு மனுதாரர் ஆறு வருடம் கடந்த பின்னர் 09.10.2017 அன்றுதான் மேற்படி இடத்தில் வீடு கட்டியுள்ளார் எனவும் அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனுவில் தெரிவித்துள்ளவாறான நிகழ்வுகள் நடைபெறவில்லை என பேரூராட்சி செயல் அலுவலரின் தல ஆய்விலும், விசாரணையிலும் அறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்திட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும், இம்முறைமன்ற நடுவ 01.10.2018 நாளிட்ட ஆணைகளின்படி (மு.ம.எண்.42/2018/பேரு) முறையீட்டு மனுதாரரால் பெறப்பட்டுள்ள கட்டிட அனுமதியை விட கூடுதலாக கட்டப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்ட கட்டுமானங்கள் தொடர்பாக விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டிட அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்

1.திரு.ஆர். பழனிச்சாமி,
த/பெ திரு. ராஜகோபால்,
எண்.108, கிழக்குத் தெரு,
அரவக்குறிச்சி,
கரூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
அரவக்குறிச்சி பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி செயலர்
முறைமன்ற நடுவ செயலர் அவர்களின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)